முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி (ம.சா.1)

RLTOP.NO.2/2025

| | | |
|---|---|---|
| பெயர் | - | பாக்கியசீலன் |
| த/பெ | - | தார்சிஸ் |
| கிராமம் | - | |
| தாலுகா | - | |
| தொழில் | - | |
| ஜாதி | - | |
| மதம் | - | |
| வயது | - | 77 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கு சம்பந்தமாக எழுத்து மூலமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வாக்குமூலம் எனது அறிவுறுத்தலின் பேரில் தயார் செய்யப்பட்டுள்ளது. எனது வாக்குமூலத்தை படித்து பார்த்து சரியென்று அறிந்து கையொப்பம் செய்திருக்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

மனுதாரர் வழக்கறிஞர் திறந்த நீதிமன்றத்தில் மனு மற்றும் முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமானது மற்றொரு வழக்கான அவ.எண்.1/2004 தாக்கல் செய்துள்ளதால், அதில் நீதிமன்றமானது Cross check செய்து கொள்ளவேண்டும் என்று நீதிமன்றத்திற்கு அறிவுறுத்துகிறார். மேற்படி மனுதாரர் வழக்கறிஞர் அறிவுறுத்தலானது இந்திய சாட்சி சட்டத்திலும், தற்போது உள்ள சாட்சி சட்டமான BSA சட்டத்திலும் அவ்வாறு குறிப்பிடவில்லை. மனுதாரர் தகுந்த ஆவணங்களுடன் சமர்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மீண்டும் மனுதாரர் வழக்கறிஞர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 3 மற்றும் 4 ஆவணமானது அசல் ஆவணங்கள் என்றும் அதை குறியீடு செய்யவேண்டும் என்று கூறுகிறார். நீதிமன்றம் மேற்படி ஆவணங்கள் பரிசீலனை செய்யும் போது நகல் ஆவணங்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே நகல் ஆவணங்களை இந்நீதிமன்றம் குறியீடு செய்யமுடியாது என்று கருதுகிறது.

(ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கானது மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- ஜெ. ஆன்ஸ் ராஜா
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.